[1994 மே 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றம் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1994), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. பா. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இதிலே, நீங்கள். தேர்தலை உடனே நடத்த வேண்டுமென்று சொல்லப்போகிறீர்கள். அமைச்சர், தடை ஆணை இருக்கிறது. அது நீக்கினால்தான் தேர்தலை நடத்த முடியும் என்று சொல்லுவார்கள். நான் கேள்வியையும் சொல்லி விடுகிறேன்: பதிலையும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இப்போதே மணி 2.30 ஆகிறது. (குறுக்கீடு) நீங்கள் கேட்கப்போவது இது தானே. உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்கப் போகிறீர்கள். அமைச்சர் என்ன சொல்லப் போகிறார்: கோர்ட்டிலே தடையாணை இருக்கிறது என்று சொல்லப் போகிறார். ஒரே வரியிலே முடியுங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

1994 மே 3]

பிற்பகல் 2-45

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தம் இப்படியே நீண்டு கொண்டே போகக் கூடாது என்கிற என்னுடைய கருத்தை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1976-லிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப் படவில்லை. இப்பொழுது இரண்டு ரிட் பெட்டிஷன்களை நாம் இங்கே கணக்குக் காட்டி, 1992 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட ரிட் பெட்டிஷன் காரணமாக இப்பொழுது தேர்தல் நடத்த முடிய வில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே இரண்டாண்டுகள் ஆகி விட்டன. இப்பொழுது இந்த ரிட் பெட்டிஷனுடைய ஸ்டே ஆர்டரை வெக்கேட் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? யார் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்? இதை எல்லாம் சற்று அலசி, ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறந்த ஒரு வழக்கறிஞர், அவரே இதன் மீது நடவடிக்கை எடுத்து, 1976 ஆம் ஆண்டிலிருந்து நடைபெறாத இந்தக் கூட்டுறவுச சங்கத் தேர்தலை நாம் உடனடியாக நடத்தினால் தான் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் கொள்கைகள் நிறை வேற்றப்படும்.

இங்கே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் உடனடி யாக இந்த ரிட் பெட்டிஷனை யார் போட்டார்களோ அவரை அழைத்துப் பேசியாவது உடனடியாகத் தேர்தலை நடத்துவதற் கான ஒரு ஏற்பாட்டை நம் மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக— நீங்கள் ஒரு ஆண்டுக்கு எடுத்துக் கொண்டு போகி றீர்கள். ஆறு மாதத்திற்கு நீங்கள் கொண்டு வந்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் ளே தேர்தல் நடைபெற்றது அதிலே சுத்தமாக 1976-லே இருந்து நடைபெறவில்லை என்பது உண்மையல்ல. தேர்தல் நடைபெற்றது; இடையிலே கலைக்கப்பட்டது என்பது தான்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுவதெல்லாம் இப்பொழுது இரண் டாண்டு ரிட்— இந்த ஸ்டே வந்து இரண்டு வருஷம் ஆகிவிட்டது. உடனடியாக நம்முடைய அமைச்சரவர்கள் யார் ரிட் போட்டார் களோ அவர்களை அழைத்துப் பேசியாவது, இல்லாவிட்டால் நீங்கள் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது என்று சொல்கிறீர்கள்,

அதே மாதிரி இங்கே ஹைகோர்ட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். அங்கே எல்லாம் ஸ்டேயை வெக்கேட் பண்ணுவதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுத்து உடனடியாக— நீங்கள் ஒரு வருஷம் நீட்டிக்க வேண்டாம் இதிலே. ஒரு ஆறு மாதம் மட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், இது ஏதோ அரசாங்கத்தினுடைய சார்பாக டிலே செய்வதாக இருப்பதைப் போல பேசுகிறார்கள். இருந்தாலும்கூட அமைச்சரவர்கள் இதிலே, வழக்கறிஞர் என்ற காரணத்தினாலே அவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கிறார். அதேபோல ஞானசேகரன் அவர்களும், அவரும் ஒரு வழக்கறிஞர்தான். இந்த உயர்நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வழக்கைப் பொறுத்த அளவிலே இவரே ஆஜராகி, இந்த வழக்கை அவரும் எடுத்து அந்த ரிட்டை வெக்கேட் செய்ய முடியும். அங்கே அதற்கு அவர் ஏதேனும் ஆவன செய்வாரா என்பதையும், தன்ப்பட்ட முறையில் முயற்சி செய்திருக்கிறாரா என்பதையும் விளக்க வேண்டுகிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் அந்தப் பொறுப்பை என்னிடம் கொடுக்குமேயானால் நான் உடனே நாளைக்கே டெல்லியிலே போய் உட்கார்ந்து செய்யத் தயாராக இருக்கிறேன். எனக்குக் காசு வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, வழக்கறிஞர் என்ற முறையிலே கேட்கிறார்கள். பொறுப்பு கொடுக்கிறது என்றால்..

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் என்ற முறையிலே நாங்களும் தாராளமாக, தயாராக இருக்கிறோம். அமைச்சரும் வழக்கறிஞர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல ரிட் பெட்டிஷன் போட்டவரை அழைத்து

இந்த அரசாங்கம் அவர்களுடன் பேசி அந்த ரிட் பெட்டிஷனை வாபஸ் வாங்குங்கள் என்று சொல்ல முடியாது. காரணம், ரிட் பெட்டிஷன் என்று சொன்னாலே, அரசாங்கம் போட்ட உத்தரவுக்கு மேலே போடப்படுகின்ற வழக்கு. ஆகவே, ரிட் பெட்டிஷனைப் போட்ட மனுதாரரைக் கூப்பிட்டு அவர்களிடத்தில் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்துங்கள் என்று சொன்னால், அரசாங்கம் போட்ட ஆணையே தவறு என்பதாக அரசாங்கம் ஒப்புக் கொண்டது போலாகும். ஆகவே, அந்த ரிட் பெட்டிஷனைப் போட்ட அந்த மனுதாரரை அழைத்து அதிலே பேச முடியாது என்பதை மாத்திரம் நான் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி நாம் சொல்வோமேயானால் இன்னும் பத்தாண்டுகளுக்கு இந்தத் தேர்தல் நடக்காது. இப்படியே போய்க் கொண்டிருக்கும். நாம் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் மக்களுடைய பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே ஒரு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை மத்திய அரசு இயற்றி நம்முடைய மாநில அரசுக்கு அனுப்பியதாகச் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது அந்த மாதிரி கூட்டுறவுச் சட்டம் வந்திருக்கிறதா ? அந்த அடிப்படையிலேயாவது நாம் ஏதாவது உடனடியாக ஒரு அமெண்டுமென்டைக் கொண்டு வந்து இந்தத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் உடனடியாக எடுத்து ஒரு ஆண்டுக்கு நீட்டித்திருப்பதைக் குறைத்து, ஆறு மாதத்திற்கு என்று நீட்டித்து, அதற்குள்ளாகத் தேர்தலை முடிப்பீர்களேயானால் தமிழக மக்கள் உங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதைச் சொல்லி அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்டத்தினுடைய இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு, ஏதோ புதிதாக இந்த ஆண்டு இப்பொழுது கொண்டு வந்த முன்வடிவு அல்ல. ஏற்கனவே இருந்த அந்தச் சட்டத்திலே ஒரு ஆண்டு என்று இருப்பதை மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டிக்க வேண்டும் என்கின்ற அந்த அடிப்படையிலே கொண்டு வரப்படுகின்ற இந்தச் சட்ட முன்வடிவு. அதாவது இதுவரையிலே 17 வருஷம் 11 மாதம் என்று இருந்ததை மேலும் ஒரு ஆண்டு கூட்டி 18 ஆண்டு, 11 மாதம் என்கின்ற அந்த வார்த்தைகள் திருத்தம்தானே தவிர,

இருக்கிற நடைமுறையிலே எந்தவிதமான மாற்றங்களும் இல்லை என்பதை எடுத்துச் சொல்லி, இன்றையதினம் கூட்டுறவு மாதிரிச் சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

கூட்டுறவு மாதிரிச் சட்டத்தைப் பொறுத்த மட்டிலே அவர்கள் கட்சி ஆளுகின்ற அந்த அரசை நடத்துகின்ற அந்த மாநிலங்களிலேகூட இன்றையதினம் கூட்டுறவு மாதிரிச் சட்டத்தை அவர்கள் நடைமுறையிலே கொண்டு வரவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை, பேரவைத் தலைவரவர்களே, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தனி அலுவலர் திருத்தச் சட்டமுன்வடிவை நீங்கள் நிறைவேறிற்த் தர வேண்டுமென்று கோருகிறேன்.

பிற்பகல் 2-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை(4— 5— 1994) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.